Good Food, Good Life

நெஸ்லே லங்கா பீஎல்சி செய்தி வெளியீடு
கொழும்பு: 23 மார்ச் 2016

**NESTLÉ COOLPRO சாதனம் - *சிறப்பான புத்துணர்ச்சியை எளிமையாக* வழங்கும் வகையில் இலங்கையில் முதலாவது கச்சிதமான குளிர் பானத் தீர்வு**

'வீட்டுக்கு வெளியில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு' (Out-of-Home) தேவையான உணவு மற்றும் பான வகைத் தீர்வுகளை வழங்கிவருகின்ற நெஸ்லே நிறுவனத்தின் ஒரு அங்கமான Nestlé Professional, நவீன, கச்சிதமான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டு, இலங்கையில் முதலாவது தனியுரிம குளிர் பான வழங்கல் சாதனமாக NESTLÉ COOLPRO இனை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவுச் சங்கிலிகள் போன்ற வீட்டுக்கு வெளியிலான சந்தைகளுக்கு, எளிமையான வழியில் குளிர்பானங்களை குளிர்விப்பதற்கு உதவும் வகையில் இது விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் தேவைகள் போகப்போக சவால்மிக்கவையாக மாறிவருகின்ற நிலையில், அவர்கள் மகத்தான சுவைகொண்ட உற்பத்திகளை நாடுவது மட்டுமன்றி, மிகச் சிறந்த தரம் மற்றும் புதிய அனுபவங்களையும் எதிர்பார்க்கின்றனர். அதிகரித்துவருகின்ற சவாலுக்கு ஏற்ப பல்வேறுபட்ட நுகர்வோர் தேவைகளை திருப்திப்படுத்தும் பான வகைகளை வழங்குவதில் வீட்டுக்கு வெளியிலான பல்வேறு வியாபாரங்கள் பாரிய சவாலை எதிர்நோக்குகின்றன.

இந்த நிலையில் அனைத்து தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் NESTLÉ COOLPRO வடிவமைக்கப்பட்டுள்ளது. மாம்பழம், குழிப்பேரி (peach) மற்றும் பால் ஆகியவற்றின் இணைப்புடன் அற்புதமான சுவையைத் தருகின்ற ஒரு நவநாகரிக, குளிர்ச்சியான மற்றும் புத்துணர்ச்சி தரும் பானமான *'Nestlé Sjora'* இனை ஆரம்பத்தில் இந்த சாதனத்தின் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும். இந்த தனித்துவமான பானம் வழங்கும் தனித்துவமான, மென்மையான மற்றும் புத்துணர்ச்சி தருகின்ற சுவை, *Nestlé Sjora* இனை தனித்துவமான ஒரு பானமாகத் திகழச் செய்கின்றது.

"வீட்டுக்கு வெளியிலான எந்தவொரு வியாபாரத்தையும் சிறப்பிக்கும் முறைமை ஒன்றை நாம் உருவாக்கியுள்ளோம். இந்த முறைமையின் கீழ் திரவச் சாறு உபயோகிப்படுவதால், கலக்கவேண்டிய தேவை கிடையாது. ஆகவே எப்போதும் தரம் ஒரே மாதிரியாக இருப்பதுடன், இச்சாதனம் நேரத்தையும் உழைப்பையும் மீதப்படுத்த உதவுவதால், உபயோகிப்பதற்கு மிகவும் இலகுவானது. மேலும் சுகாதாரம் மிக்கதுடன், மிகச் சிறிய இடத்தையே எடுத்துக்கொள்கின்றது" என்று Nestlé Professional இன் உதவித் தலைமை அதிகாரியான ரொஷான் பெரேரா அவர்கள் குறிப்பிட்டார். "அனைத்தையும் ஒரு பட்டனை இயக்குவதன் மூலமாக மிக இலகுவாக செயற்படுத்த முடியும். எமது சாதனம், வீட்டுக்கு வெளியிலான தொழிற்பாட்டாளர்களுக்கு உண்மையான மாற்றத்தினை வழங்கி, இலங்கையின் குளிர் பான தொழிற்துறையில் புரட்சிகரமான மாற்றத்திற்கு வித்திடும் என நாம் திடமாக நம்புகின்றோம்."

"எனது சிற்றுண்டி உணவகத்தில் உள்ள பான வழங்கல் சாதனங்கள் அனைத்தும் கையால் இயக்கப்படுகின்றவையாக இருப்பதால், அதனை உபயோகிக்கும் நேரங்களில் பணியாளர் ஒருவர் கட்டாயமாக அதன் அருகில் இருந்தே ஆக வேண்டும். NESTLÉ COOLPRO தன்னியக்க பான வழங்கல் முறைமையின் மூலமாக எனது பணியாளர்கள் தங்களது நேரத்தை இன்னும் திறன்மிக்க வழியில் உபயோகப்படுத்திக்கொள்ள முடியும்" என்று Sponge Pastry Shop சிற்றுண்டி உணவகத்தின் உரிமையாளரான ஏகாந்த பண்டிதசேகர அவர்கள் குறிப்பிட்டார். "இந்த சாதனத்தில் வழங்கல் அளவைக் கட்டுப்படுத்தும் அம்சமும் உள்ளமையால் வீணாகிப் போய்விடுமோ என்ற கவலையும் இனிமேல் கிடையாது. தொடுகை முகத்திரையில் 'வழங்கப்பட்டுள்ள கோப்பைகளின்' எண்ணிக்கை தொடர்பான தகவல் கிடைக்கப்பெறுகின்றமையால், எனது கையிருப்பு மட்டங்களை நான் திறன்மிக்க வழியில் பேணி, செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும் முடியும். ஒவ்வொரு கோப்பை பானமும் ஒரே தரத்தில் இருப்பதற்கான உத்தரவாதமே NESTLÉ COOLPRO இல் எனக்கு மிகவும் பிடித்த அம்சமாகும்.

வீட்டிற்கு வெளியிலான எந்தவொரு வியாபாரத்தின் தேவைகளுக்கும் மிகவும் பொருத்தமான ஒன்றாக வடிவமைக்கப்பட்டுள்ள NESTLÉ COOLPRO, நாடளாவியரீதியிலுள்ள விற்பனை நிலையங்களில் கிடைக்கப்பெறவுள்ளது.